1989 அக்டோபர் 31] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

பாடு மிகவும் கடுமையாக இருந்து கொண்டு வருகிறது. அதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன். அதோடு ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் பற்றி ஏற்கனவே நானும் ஒரு ஒத்திவைப்பு தீர்மானத்தை கொடுத்திருக்கிறேன். அதற்கும் தாங்கள் அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்றொன்று. 200 ரூபாய்க்கு கீழே உள்ளவர்களுக்கு இலவச வேட்டி, சேலை கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். . . . (குறுக்கீடு).

(10.50)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதான். ஒரு பிரச்சினை மட்டும்தான். ஏற்கெனவே அதுபற்றிச் சொல்லியாகி விட்டது.

4. அறிவிப்புகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி (1)-ன் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களைப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairman) நியமிக்கிறேன் :

1. திரு. சா. கணேசன்.
2. டாக்டர் க. காஞ்சனா.
3. திரு. வே. தங்கபாண்டியன்.
4. திரு. கே. அர்ஜுனன்.
5. திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்.
6. திரு. கோ. பூவராகன்.

5. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் பதினைந்தாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.